

ALPHA MIND POWER™

"Power of the Subconscious Mind"

Newsletter

**OCTOBER 2015**

My Dear Alpha Siddha,

As the scorching sun gives way to the cloudy skies and the drizzling rain, we are getting ready to welcome the rainy season in the southern states of India. Let us get sufficient rains this year.

In this letter I wish to tell you about the new class 'SHANTAGNI- Reprogram Your Mind' which we had at Rishikesh this month. This program was conceived and designed with the instructions and guidance of Mahavatar Babaji. It was a 5 days' retreat. We were on the banks of the Ganges! The name of the area where we stayed this time was Tapovan! It all seemed predestined I should say. This program was meant to cleanse and erase all negative imprints from the deeper levels of our mind. And then, fill the mind with peace and happiness. And, I am very glad to tell you, all the participants experienced this transformation by the end of the program.

As the name implies, this program was aimed at wiping out all the fires that keep burning within us – fires of anger, hatred, jealousy, fear, revenge, hurt. Every mind has some of these emotions buried deep within. Although we keep doing so many meditations to purify ourselves there is still some residue left somewhere within us. This program achieved the task of putting out all those fires and then making us experience pure bliss- Shanti! All the flames have been doused! Now, there is only one AGNI, only one flame – the gentle flame of SHANTI glowing beautifully within us. A flame that removes all the darkness from within, a flame that dissolves all the negativities from within, a flame that fills every corner of our mind with peace, happiness and bliss!

By the end of the program each and every one was seen with a broad smile! There was so much happiness and joy on every face! I feel every individual needs something like this to help us to get rid of the burden that we carry in our minds! Once all the burden is removed, life becomes so different. Some feedback about Shantagni program is given in this newsletter. Please go through it.

Sitting in Tapovan and meditating on the banks of Ganges is a different experience altogether! One day just as we completed a meditation, we could feel Ganga Devi coming into the hall and blessing all of us! And this was felt by many people present there! That was really an unforgettable ecstatic experience!

Many times during my counseling sessions I have advised people to get rid of the baggage that they are carrying in their minds. That will help them to move on in life. That will also make their relationships much better. Many of them were able to do it with the help of the meditations in our classes. But, this program took everyone to a different level altogether. And the best part is that even now, a few weeks after the program is over, people are writing to me that they still feel the serenity within themselves. It is still intact! Believe me, that is something one has to treasure!

Now, the demand is on for another Shantagni program somewhere in the South where more people can attend easily. We are looking for a suitable venue. We will decide the venue and dates very soon and inform you. Be ready to join us and experience the same peace, happiness and bliss!

My blessings to you for a lighter mind and a fuller life!

Srimatha

என் அருமை ஆல்ஃபா சித்தரே,

சுட்டெரிக்கும் வெயில் முடிந்து மழை மேகம் சூழத் துவங்கி விட்டது. இனி தென்மாவட்டங்களில் மழையை வரவேற்க நாம் தயாராக வேண்டும். இந்த வருடம் போதுமான அளவு மழை பெய்யட்டும்.

இக்கடிதத்தில் சமீபத்தில் ரிஷிகேஷில் நடந்து முடிந்த '**சாந்தக்னி**– மனதை தூய்மைப் படுத்து' என்ற வகுப்பை பற்றி எழுத விரும்புகிறேன். மகா அவதார் பாபாஜியின் உத்தரவு மற்றும் வழிகாட்டுதலுடன் நடந்த வகுப்பு இது. 5 நாள் வகுப்பாக நடந்தது. கங்கை கரையிலேயே இருந்தோம்! நாங்கள் இருந்த இடத்தின் பெயர் தபோவனம்!! எல்லாமே ஏதோ முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டது போல இருந்தது! மனதின் ஆழத்திலிருந்து தீய பதிவுகளை எல்லாம் முழுவதும் நீக்கி விடும் விதத்தில் இந்த வகுப்பு அமைக்கப்பட்டிருந்தது. அதன் பிறகு மனதில் அமைதியும் சந்தோஷமும் நிறைந்துவிடும் விதத்தில் அமைத்திருந்தேன். இப்பொழுது மிக்க மகிழ்ச்சியுடன் என்னால் சொல்ல முடியும். அங்கு கலந்து கொண்ட ஒவ்வொருவரது மனதிலும் இந்த மாற்றம் வகுப்பு முடிவதற்குள் உணர முடிந்தது.

பெயருக்கு ஏற்றார் போல் நம் மனதில் உள்ள எத்தனையோ அக்னிகளை எரித்து விடும் வகுப்பாக இது அமைந்து விட்டது - கோபம், வெறுப்பு, பொறாமை, பயம், பழிவாங்கும் உணர்வு போன்ற பல வலிகள், பல அக்னிகள். ஒவ்வொரு மனதிலும் இருக்கின்றன. மிக ஆழமாகவே புதைந்து இருக்கின்றன. நம்மை தூய்மைபடுத்த எத்தனையோ தியானங்கள் நாம் செய்தாலும் இவற்றின் மிச்சம் எங்கேயோ நமக்குள் நெருடிக் கொண்டு தான் இருக்கிறது. இந்த வகுப்பு அந்த அக்னியை எல்லாம் அணைத்து விட்டது. மிஞ்சி இருப்பது வெறும் சாந்தி மட்டுமே அக்னி அத்தனையும் எரிக்கப்பட்டு விட்டது. இப்பொழுது இருப்பது ஒரே ஒரு அக்னி மட்டுமே – மென்மையாக அழகாக நமக்குள் ஒரு தீபம் போல எரியும் ஒரு அக்னி – சாந்தக்னி நமக்குள் இருக்கும் இருளை போக்கும் ஜோதி இது. நமக்குள்ளிருக்கும் தீயவற்றை களைந்து விடும் ஜோதி இது. நமது மனதின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அமைதி, சந்தோஷம், ஆனந்தம் என்று நிறைத்து விடும் ஜோதி இது.

நிகழ்ச்சி முடியும் நாளில் ஒவ்வொருவர் முகத்திலும் அகன்ற ஒரு சிரிப்பு! ஒவ்வொரு முகத்திலும் அப்படி ஒரு சந்தோஷம்!ஒவ்வொரு மனிதருக்கும் மனதிலுள்ள பாரத்தை இறக்கி வைக்க இப்படி ஒரு வாய்ப்பு தேவை என்று எனக்கு தோன்றுகிறது. அந்த பாரம் இறங்கி விட்டாலே வாழ்க்கையே மாறி விடுகிறது. சாந்தக்னி வகுப்பில் கலந்து கொண்டவர்களின் அனுபவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை படியுங்கள்.

தபோவனத்தில் கங்கை கரையில் அமர்ந்து தியானம் செய்வது ஒரு தனி அனுபவம் தான்.ஒரு நாள் தியானத்தை முடிக்கும் தறுவாயில் கங்கா தேவியே அந்த அறைக்குள் வந்து எல்லோரையும் வாழ்த்தியதை அனைவருமே உணர முடிந்தது. அது ஒரு மறக்க முடியாத சிலிர்க்க வைத்த அனுபவம்.

பல முறை தனிப்பட்ட ஆலோசனையின் போது நான் பலருக்கு சொல்லி இருக்கிறேன். மனதிலிருக்கும் பாரத்தை சற்று இறக்கி வைத்து விடுங்கள் என்று. அப்பொழுது தான் வாழ்வில் முன்னேறி செல்ல முடியும். அப்பொழுது உறவுகள் கூட இன்னும் சிறப்பாக இருக்கும் என்று. பலரால் இதை நமது மற்ற வகுப்புகளிலே கற்றுக் கொள்ளும் தியானங்கள் மூலம் செய்ய முடிகிறது. ஆனால் இந்த வகுப்பு எல்லோரையும் வேறு ஒரு கட்டத்துக்கு கொண்டு சென்று விட்டது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் நிகழ்ச்சி முடிந்து சில வாரங்கள் கடந்து விட்ட பொழுதும் அந்த நிம்மதி அப்படியே இருப்பதை பலர் எனக்கு எழுதி வருகிறார்கள். இது நிச்சயமாக போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் தான்.

இப்பொழுது தென்னகத்தில் சாந்தக்னி வகுப்பு வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. தமிழகத்திலேயே இருந்தால் பலர் கலந்து கொள்ள சௌகரியமாக இருக்கும். தகுந்த இடத்தை தேடிக்கொண்டிருக்கிறோம். விரைவில் இடமும் தேதியும் முடிவு செய்யப்பட்டு உங்களுக்கு தெரியப்படுத்தப்படும். அப்பொழுது அந்த வகுப்பில் கலந்து கொண்டு அதே அமைதி, சந்தோஷம், ஆனந்தம் அனைத்தையும் அனுபவிக்க தயாராக இருங்கள்.

உங்கள் மனம் லேசாக இருக்க, உங்கள் வாழ்க்கை முழுமையாக இருக்க எனது ஆசீர்வாதங்கள்

ஸ்ரீமாதா

## SHANTAGNI FEEDBACK – சாந்தக்னி அனுபவங்கள்

குருஜி, சாந்தக்னி வகுப்பிற்குப் பிறகு வீட்டில் தியானங்கள் மிகவும் ஆனந்தமாகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருக்கின்றன. எனக்குள்ளும் என்னை சுற்றியும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ரசித்து அனுபவித்து வருகிறேன். நன்றி!

**கிருஷ்ணவேணி - சென்னை.**

உண்மையாகவே சாந்தக்னிக்குப் பிறகு எனக்குள் ஒரு மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. மனதில் நிம்மதியை உணருகிறேன். நன்றி குருஜி.

**ப்ரியா கிருஷ்ணன் - சென்னை.**

ஒரு பூ மலர்ந்து விட்டது. புதிதாக பிறந்தது போல் உணருகிறேன். நன்றி! மாதாஜி!

**ராஜாமணி - சென்னை.**

இந்த வகுப்பிற்குப் பிறகு என் கையிலிருந்த ரேகைகள் கூட மறைந்து விட்டன. ஆச்சரியமாக இருக்கிறது! மனதில் எப்பொழுதும் அமைதி, சந்தோஷம், ஆனந்தம் தான்! **ஜெயஸ்ரீ - புதுதில்லி.**

தபோவனத்தில் ஆச்சரியமான அனுபவம் சாந்தக்னி! 18 நாட்கள் கடந்தும் அங்கு பெற்ற அமைதி தொடர்கிறது. அமைதியாக இருக்கிறேன். ஆனந்தமாக இருக்கிறேன். நிம்மதியாக இருக்கிறேன்.

**நடனமணி - கோவை.**

எங்கள் 4 வயது மகள் சொன்னாள் ‘அப்பா, எனக்கு அம்மாவை இப்பொழுது அதிகமாக பிடிக்கிறது. ஏனென்றால் அவர் என்னிடம் அன்பாக இருக்கிறார்’. இது சாந்தக்னியின் சாதனை! கோபம் கரைந்து விட்டது! சந்தோஷம் பொங்குகின்றது! எங்கள் தியானங்கள் சிறப்பாக இருக்கின்றன.

**சதிஷ் & காயத்ரி - பெங்களூரு.**

Om Nama Shivay! Life has become smoother..more free.. more powerful after the retreat. And Pranams Ma. I told you about how the lines on my palm disappeared. It has been confirmed by my palmist also. It's the most wonderful thing after Shantagni. Calmness prevails all around. Bliss is always there. Some people whom I could not stand earlier do not affect me now. Im loving the experience. Peace, Happiness and Bliss still echoing in my ears. Thanks a ton Ma –

***Jaishree, Delhi***

Alpha Vanakkam to all… Shantagni has indeed doused the AGNI of all negativities within us and established SHANTI in our thoughts, words and action. Thanks to our dearest SRIMATHA for this amazing retreat.

***Yamuna , Bangalore.***

Hema and I are experiencing big changes in our routine. All the flames of agonies within us were tamed by SHANTAGNI. Our sincere Pranams to Shree Mathaji!

***Hari& Hema, Tuticorin.***

Feeling Blissful after attending Shantagni.

***Mrutyunjay, Goa.***

Just as the name ‘Shantagni’ implies, we came here to put out the flames of negativities. All the agni within us is now put off. We are now thoughtless and feel only ‘Shanti’. After this program my mind is still and clarity of thoughts is very good. It is a blissful experience. We could feel the higher energies very vividly.

***Saranya Ravindran, Chennai.***

This is a super well thought through/well designed course – much much required for us to go through. It is a super cleansing process for us to progress in Life – to fulfill materialistic goals and thereby progress in our spiritual journey! -

***Mohan Ganesh, Hyderabad.***

Transformation is the one word which is so apt for this workshop.

***Sandhya Inamdar, Bengaluru.***

Mind has become like an empty slate! With Guru's blessings we have now got a mind which does not keep worrying about what happened in the past. Now we have a strong belief about the future and a very healthy positive attitude. All pain in the body and mind has disappeared and we experience only good health. That is the truth. In this program ‘Shanthagni’, Srimathaji has given us a Spiritual Scanner to scan ourselves and make us fit to live happily in this life and also discover our mission in life. No words to thank Guruji.

***Raialakshmi Subramanian.***

## AMP வாட்ஸ்அப் குரூப்ஸ்

AMP வாட்ஸ்அப் குரூப்கள் உறுவாக்கப் பட்டு வருகின்றன். இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் ஒரு குரூப்பில் இல்லாவிட்டால் AMP அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் மொபைல் நம்பரை தெரியப்படுத்தவும்.

## AMP Whatsapp groups!

We are now creating AMP whatsapp groups so that we can communicate easily and you can also receive updates quickly. If you are not already in one of our groups, please contact AMP office and give your mobile number to be added.



*Guruji with Alpha Siddhas at Srividya workshop-Chennai*



*Guruji with Alpha Siddhas at Shantagni workshop - Rishikesh*

### Watch Guruji's TV Programs!

| | |
|---|---|
| Makkal TV | : Saturday 9.00 am |
| Sankara TV | : Sunday 10.30 am |
| Pothigai TV | : Monday 1.30 pm |

Watch Guruji's TV programs also on our Website

www.alphamindpower.net

### கூட்டு தியானம்!

தினமும் காலை 5.30 மணிக்கும் இரவு 10 மணிக்கும் எல்லா ஆல்ஃபா சித்தர்களும் சேர்ந்து தியானம் செய்து வருகிறார்கள். நீங்களும் இதில் கலந்து கொளளுங்கள். உங்கள் வீட்டிலிருந்தபடியே இதே நேரத்தில் நீங்கள் தியானம் செய்யலாம். ஏதேனும் ஆல்ஃபா தியானம் நீங்கள் செய்யலாம். மனதால் குரு, கடவுள் மற்றும் சித்தர்களுடன் தொடர்பு கொள்ளவும். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான ஆல்ஃபா சித்தர்கள் தியானம் செய்வதால் மிகுந்த சக்தியை உணர்வீர்கள்!

### Collective meditation!

All Alpha Siddhas are joining together in a collective meditation at 5.30 am and 10.00 pm. You are also invited to join us. You can meditate at your own residence at this time. You can do any Alpha meditation at that time. Mentally connect with Guru, God and Holy Siddhas. You will feel a lot of energy as thousands of Alpha Siddhas will be meditating at that time.